**இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூன் 14 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கம் தவிர எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும்

உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுகளுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| பந்தியுடனான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.1 (அ) | சுற்றறிக்கையின் 7(v) ஆம் பந்தியின் பிரகாரம் தேறிய சொத்துக்களைக் கணக்கிடும் முறை குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையால் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் மொத்தச் சொத்துக்கள் மொத்த பொறுப்புக்களுக்கு இடையே ரூபா 299,675 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்

நிதிக்கூற்றுக்களில் உரிய வருமானம் அல்லாத பெறுவனவுகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மதிப்பீடுகளை முடிந்தவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிப்பது கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதிலும், 10 விடயங்களில் மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா | 2020 ஆம் ஆண்டில் அந்தந்த விடயங்களுக்கான கோரப்பட்ட ஒதுக்கீடுகள் கிடைக்காததால், அத்தியாவசிய செலவினங்களை தீர்வு செய்வதற்காக மிகையாக இருந்த செலவின விடயங்களிலிருந்து மாற்ற | மதிப்பீடுகளை முடிந்தவரை முழுமையாக சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 32,428,000 தொகையில் ரூபா 9,175,000 தொகை அதாவது 28 சதவீதம் ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. செலவினங்களுக்கு இடையே மாற்றல் 1 சதவீதம் முதல் 100 வரையாக இருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் மேலும் COVID 19 தொற்றுநோய் சூழ்நிலையில் எதிர்பாராத விதமாக செலவினம் மேற்கொள்ள நேர்ந்தமை காரணமாக மதிப்பிடப்பட்ட பிரகாரம் நிதிஏற்பாடுகளை பயன்படுத்த முடியாமையால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாக்கல் மற்றும் பாடநெறிகளுக்கான செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக 325-01-1-2401 செலவின விடயத்தில் அதிகளவு நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தமையால் அந்நிதி ஏற்பாடு வேறு விடயங்களுக்கு மாற்றப்பட்டன. | |
| (ii) | மீளாய்வாண்டிற்காக கொடுப்பனவு செய்வதற்கிருந்த ரூபா 1,522,321 தொகையான செலவினம் பொறுப்புக்களாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்காக 2021 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட கொடுப்பனவுகளில், கணக்காய்வு விசாரணை மூலம் சுட்டிக் காட்டப்பட்ட பட்டியல் கணக்குப் பிரிவிற்கு கிடைக்கும் போது நிதிக்கூற்றுக்கள் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்ததால், பட்டியல்களை பொறுப்பு பதிவேட்டில் சேர்க்க முடியாது இருந்ததுடன், அந்நிறுவனம் தொடர்பாக துரிதமாக பட்டியல்களை பெற்றுக் கொள்வதற்காக தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க முன்னர் மீண்டும் பின்தொடர் நடவடிக்கை எடுத்து பொறுப்பு பதிவேட்டினை தயாரிப்பதற்காக கணக்காளர் மற்றும் அவரது பதவியணியிருக்கு ஆலோசணை வழங்கப்பட்டது. | பொறுப்புக்கள் சரியாக காட்டப்பட வேண்டும். |
| (iii) | பொறுப்புக்கள் மற்றும் செலவின அளவு எந்தவொரு வேலையிலும் நிதியாண்டிற்கான நிதி ஏற்பாட்டினை மிகைக்க கூடாத போதும் 05 மீண்டெழும் செலவின விடயங்களுக்காகவும் மூலதனச் செலவின விடய மொன்றுக்காகவும் நிதி ஏற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் 2020 ஆம் ஆண்டிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு கிடைக்காமை மற்றும் வாக்கு கணக்கு மூலம் நிதி ஏற்பாடு வழங்கியதன் பேரில் முறையாக பொறுப்புக்களுக்கு உட்படுதல் சிக்கலாக இருந்த போதும் திணைக்களத்தின் செயற்பாடுகளை மேற்கொள்ள COVID 19 தொற்று | தேறிய நிதிஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்களுக்கு உட்படக் கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | | நிலைமையில் இலங்கை கரையோரப் பிரதேச ஆட்களின் உயிர்களை பாதுகாப்பதற்கும் அதற்காக அத்தியவசிய செலவினங்களை தீர்வு செய்வதற்கும் தேறிய நிதி ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்களுக்கு உட்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து பொறுப்புக்களுக்கு உட்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iv) | செலவின தலைப்பினுள் நிதிஏற்பாடு சேமிக்கப் பட்டிருக்கையில் அதற்கு காரணமாக கோரப்பட்ட பிரகாரம் கட்டுநிதி கிடைக்கவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்காக வாக்கு கணக்கு மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அந்தந்த காலப்பகுதிகளில் கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் காணப்பட்ட பட்டியல்களை தீர்வுசெய்வதற்காக கட்டுநிதி கோரப்பட்ட போதும் கட்டுநிதி முறையாக கிடைக்காமை அடிப்படையில் கொடுப்பனவு செய்தல் தாமதமானமையால் வழங்குனர்கள் விடயங்களை வழங்க முடியாதுள்ளதாக அறிவித்திருந்ததுடன் பாதுகாப்பு அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட வழங்குனர்கள் கொழும்பு மற்றும் அதற்கு சுற்றுபுறமாக இருப்பதால் COVID – 19 தொற்று நிலைமை காரணமாக அவர்களின் வியாபார நிலையங்களை நீண்டகாலம் மூடியிருந்தமையால் விடயங்களை குறித்த திகதிகளில் பெற்றுக்கொள்ள முடியாமை காரணமாக ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாட்டை முறையாக பயன்படுத்த முடியாமை மற்றும் ஆண்டின் இறுதியில் கோரப்பட்ட கட்டுநிதி கிடைக்காமை காரணமாக கொடுப்பனவு செய்வதற்கு முடியாத பட்டியல் இருந்தமை காரணமாக செலவின விடயங்களில் நிதிஏற்பாடு மிகையாக இருந்தது. | சேமிப்புக்களுக்கு காரணங்களை காட்டும் போது உரிய வகையில் பரீட்சித்து காரணங்கள் குறிப்பிடப்பட வேண்டும். |
| (v) | தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கையேற்றலுக்கான தேறிய நிதி ஏறபாட்டில் ரூபா 4,480,000 தொகை | தேவையான விடயங்களை கொள்வனவு செய்வதற்காக கேள்வி நடைமுறையின் கீழ் செயற்பட்டு வழங்குனர்களுக்கு நிதி ஏற்பாடு மிகைக்காத | நிதிஏற்பாடு உயர்ந்த அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் இறுதியின் போது ரூபா 1,310,904 அதாவது 29 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | வகையில் கட்டளைகள் சமர்ப்பிக்கப்பட்ட போதும் ஆண்டுபூராகவும் காணப்பட்ட COVID – 19 தொற்று நிலைமை காரணமாக தளபாடங்கள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அதிகளவு மூடப்பட்டிருந்தமையால் மற்றும் கணனி மற்றும் அச்சு இயந்திரங்கள் இறக்குமதி தடைப்பட்டமை அடிப்படையில் கோரப்பட்ட விடயங்கள் வழங்குனர்களால் வழங்குவதற்கு தவிர்த்தமை காரணமாக 325-1-01-2102 தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் சொத்துக்கள் விடயங்களில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டது. | வேண்டும். |
| (vi) | உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகள் மற்றும் அலுவலக தேவைகள் முறையாக பேணுதல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக இருந்த போதும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 1,471,885 அதாவது 9 சதவீதத்தினால் மிகைத்திருந்தது. | 325-1-01-1201 எழுதுகருவிகள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகளின் கீழ் அத்தியவசிய விடயங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக விலை அதிகரித்தமையும் COVID 19 தொற்று நிலைமையில் கரையோரப் பாதுகாப்பு ஆட்கள் அதிகளவில் முகாம்களில் தரித்து இருந்தமையும் விடுமுறையில் சென்று வந்த கரையோர பாதுகாப்பு ஆட்களுக்காக பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தின் பேரில் முகாமைச் சுற்றி தனிமைப்படுத்தல் நிலையமொன்றை நிறுவி தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி கடமைகளுக்காக இணைக்கப்படுவதால் அவர்களின் சுகநலன் வசதிகள் மற்றும் அந்நிலையங்களின் நீர் / மின்சாரப் பட்டியல்களை பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவு செய்தமை காரணமாக 2020 ஆம் ஆண்டில் மின்சாரம் மற்றும் நீர் பயன்பாடு அதிகரித்திருந்த போதும் 325-1-01-1403 மின்சாரம் மற்றும் நீர் செலவின விடயங்களின் கீழ் செலவினம் அதிகரித்துள்ளது. | உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைகள் மற்றும் அலுவலக தேவைகள் முறையான கட்டுப்பாட்டுடன் பேணிச்செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vii) | அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது செலவினங்களைத் திட்டமிட வேண்டிய போதும் மீளாய்வாண்டில் 07 செலவின விடயங்களுக்காக ஆரம்ப நிதி ஏற்பாட்டிற்கு மேலதிகமாக குறைநிரப்பு மதிப்பீடு, நிதிப் பிரமாணம் 66 மற்றும் 69 மாற்றல்கள் மூலம் ரூபா 23,350,000 ஆன நிதிஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு 2020 ஆம் ஆண்டிற்காக அந்தந்த செலவின விடயங்களுக்கு தேவையான நிதி ஏற்பாடு மதிப்பீடு செய்யப்பட்டு கோரப்பட்ட போதும் நிதிஏற்பாடு கோரப்பட்ட பிரகாரம் கிடைக்கா மையால் திணைக்களத்தின் செயற்பாடுகளை முறையாக தொடர்ந்து மேற்கொள்வதற்கு அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் அத்தியவசிய செலவினங்களை முகாமை செய்வதற்காக நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் மூலம் நிதிஏற்பாடுகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் மின்சாரம் மற்றும் நீர் என்பவற்றை மிகவும் சிக்கனமாக பயன்படுத்திய போதும் காணப்பட்ட COVID 19 தொற்று நிலைமையில் கூடுதலானோர் முகாம்களில் இருந்தமையால் விடுமுறையில் சென்று வந்த்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்காக தனிமைப்படுத்தல் நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்கும் அவ்விடங்களின் சுகநலன் வசதிகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதன் பேரில் நீர் மற்றும் மின்சாரப் பாவனை ஒப்பீட்டு ரீதியில் அதிகரித்துள்ளதாகவும் திணைக்களத்தின் பட்டியலையும் தனிமைப்படுத்தல் நிலையங்களின் பட்டியல்களையும் தீர்வு செய்வதற்காக அப்பட்டியல்களின் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு போதியதாக இல்லாமையால் பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்துடன் மேலதிக நிதியைப் பெற்றுக்கொள்ள நேர்ந்தது. | அங்கீகரிக்கப்பட்ட செலவின எல்லைக்குள் தமது செலவினங்களைத் திட்டமிடல் வேண்டும். |
| (viii) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் கீழ் 2020 இன் நிதிக் கூற்றுக்களை தயாரிப் பதற்கான வழிகாட்டல்களின் 3.2 பிரிவின் பிரகாரம் | 2020 வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது தவறுதலாக பெறுமதி அண்மித்த ரூபாவிற்கு கணக்கிடப்படவில்லை எனவும் அடுத்துவரும் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது வருமானம், செலவினம் மற்றும் பிற முக்கிய பேரேடுகளின் மீதிகளின் பெறுமதி அண்மித்த ரூபாவிற்கு அறிக்கையிட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ix) | மீளாய்வாண்டின் நிதி செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட சம்பளம், வேதனங்கள் மற்றும் ஏனைய ஊழியர் நலன் பெறுமதிக்கு உள்ளடக்கப்பட வேண்டிய ரூபா 162,050 ஆன உள்நாட்டு பிரயாணச் செலவினத்தின் பெறுமதி ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் நலன்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிச்செயலாற்றல் கூற்றின் குறிப்பு இலக்கம் 5 இற்குரிய ACA 2(ii) இல் சம்பளம், வேதனங்கள் மற்றும் ஏனைய சேவைகள் நலன்களின் கீழ் 1001, 1002 மற்றும் 1003 செலவின விடயங்களின் கூட்டுத் தொகையாக காண்பிக்குமாறும் அக்கூற்றின் குறிப்பு இலக்கம் 6 இற்குரியதாக ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளின் கீழ் உள்ள பிரயாணச் செலவினம் 1101 மற்றும் 1102 உள்ளடக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளதால் ரூபா 162,050.00 தொகை உள்நாட்டு பிரயாணச் செலவினத்தின் கீழ் குறிப்பு 6 இன் கீழ் ஏனைய பொருட்கள் சேவை நலன்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களைக் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திறைசேரி அச்சுப் பிரதியின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதிகளின் பெறுமதி ரூபா 2,049,548,628 ஆக இருந்தது. அப்பெறுமதி நிதி நிலைமை தொடர்பான கூற்றில் (ACA-06) ஆரம்ப மீதியாக சரியாக நிருபணமாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஏசீஏ - பீ இல் நிருபணமான 2019 ஆம் ஆண்டின் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் | 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் வரையில் திறைசேரியின் இறுதி அறிக்கைகளில் நிதியல்லாத சொத்துக்களின் ஆரம்ப மீதிகளை நாளதுவரையாக்காமல் இருந்ததால் அரச கணக்குகள் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் காணப்பட்ட பெறுமதிகள் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அரச கணக்குகள் திணைக்களத்துடன் தொடர்புபட்டு நிதியல்லாத சொத்துக்களை நாளதுவரையாக்க நடவடிக்கை | நிதிக்கூற்றுக்களில் சரியாக பதிவுசெய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அப்பெறுமதி ரூபா 103,427,526 என பதிவு செய்யப்பட்டிருந்தது. | எடுக்கப்பட்டது. ஆதலால் 2019 ஆம் ஆண்டில் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி சரியானது அல்லாதது என்பதுடன் 2020 ஆம் ஆண்டின் நிதி நிலைமை தொடர்பான கூற்று (ACA - 6) இல் ஆரம்ப மீதியாக நாளது வரையாக்கப்பட்ட ரூபா 2,049,548,628.00 ஆன சரியான பெறுமதி பதிவு செய்யப்பட்டது. | |
| (ii) | மீளாய்வாண்டின் திறைசேரி அச்சுப் பிரதியின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்களின் இறுதி மீதி ரூபா 2,067,996,003 ஆக இருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 2,067,946,003 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ரூபா 50,000 குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் திறைசேரி அச்சுப் பிரதியின் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்களின் இறுதி மீதி மற்றும் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் (ACA-6) இல் இறுதி மீதியாக ஒப்பிடப்பட்ட போதும் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் அப்பெறுமதியை உள்ளடக்கும் போது ரூபா 2,067,946,003 என பதிவு செய்யப்பட்டிருந்ததுடன் எதிர்வரும் வருடாந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அவ்வாறான தவறொன்று இடம்பெறாமல் இருக்க தேவையான நடவடிக்கை எடுப்பேன் | - மேற்படி - |
| (iii) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 2,067,996,003 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஒதுக்கப்பட வேண்டிய போதிலும் அது ரூபா 2,067,876,885 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கம் ரூபா 119,119 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்றில் நிதியல்லாத சொத்துக்களின் இறுதி மீதி ரூபா 50,000 ஆல் குறைத்து பதிவு செய்யப்பட்ட காரணத்தினால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஒதுக்கீடும் அப்பெறுமதியால் குறைத்து பதிவு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (iv) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் கீழ் 2020 இன் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்குரிய வழிகாட்டல்களின் 07(v) பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது திணைக்களத்தின் தேறிய சொத்துக்களின் பெறுமதி கணக்கிடப்பட்டு நிதி நிலைமைக்கூற்றில் அப்பெறுமதி காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | 02/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் திணைக்களத்தின் தேறிய சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

**(இ) காசுப்பாய்ச்சல் கூற்று**

செயற்பாட்டு நடவடிக்கைளினால் உருவான காசுப் பாய்ச்சலை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் உருவான தேறிய காசுப் பாய்ச்சலை கருத்திற் கொள்ளும் போது தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களின் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 70,869,949 ஆன மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் உட்பட ரூபா 7,069,211 ஆன இயலளவு அபிவிருத்தி செலவினம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டில் செயற்பாட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 77,939,160 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது மூலதன செலவின விடயங்களில் பணமாக செலவிடப்பட்ட செலவினம் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளதுடன் எதிர் காலத்தில் மூலதனச் சொத்துக்கள் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் மற்றும் இயலளவு அபிவிருத்தி செலவினம் தனிப்பட்ட சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களின் கீழ் காண்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

**(ஈ) கட்டுநிதி மீதி**

கட்டுநிதி மீதியை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திறைசேரியின் இறுதி கட்டுநிதி பொழிப்பு (SA - 70) இன் பிரகாரம் கட்டுநிதி பெறுவனவு பெறுமதி ரூபா 144,899,618 ஆக இருந்த போதும் (ACA - 3) மாதிரியின் பிரகாரம் ரூபா 145,226,080 தொகையே காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டுநிதி பெறுவனவு ரூபா 326,462 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ACA – 3 மாதிரியில் திறைசேரியிடமிருந்து இத் திணைக்களத்திற்கு கிடைத்த கட்டுநிதி பெறுவனவு ரூபா 144,670,000 மற்றும் ஏனைய மூலாதாரங்களிலிருந்து கிடைத்த அதாவது வருமானம் அல்லாத பெறுவனவுகள் ரூபா 481,487 தொகையும் வைப்புக் கணக்கிற்காக கிடைத்த ரூபா 62,167 மற்றும் முத்திரை கட்டண வைப்புக்கள் ரூபா 12,425 ஆன மொத்தமான ரூபா 556,080 என காண்பிக்கப்பட்டிருந்தன. அவ்வாறே திணைக்கள பணத்திலிருந்து செலவிடப்பட்ட செலவினங்களின் மொத்தம் ரூபா 145,226,080 ஆக இருந்ததுடன் அது ACA – 3 | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மாதிரியில் கட்டுநிதி தீர்ப்பனவாக காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இதன் பின்னர் திறைசேரி இறுதி கட்டுநிதி பொழிப்பு (SA / 70) இன் பிரகாரம் கட்டுநிதி கணக்கை தயாரிப்பதற்காக கணக்காளர் மற்றும் அதன் பதவியணியினருக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. | | |
| (ii) | மீளாய்வாண்டின் திறைசேரியின் இறுதி பரீட்சை மீதியில் (7002/409/20) ஏனைய மூலாதாரங்கள் மூலம் கட்டுநிதி பெறுவனவு பெறுமதி ரூபா 229,618 ஆக இருந்த போதும் (ACA - 3) மாதிரியில் ரூபா 556,080 தொகையே காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மூலாதாரம் மூலம் கட்டுநிதி பெறுவனவு ரூபா 326,462 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - | |
| (iii) | மீளாய்வாண்டின் திறைசேரியின் இறுதி கட்டுநிதி பொழிப்பு (SA - 70) இன் பிரகாரம் கட்டுநிதி தீர்ப்பனவு பெறுமதி ரூபா 144,899,618 ஆக இருந்த போதும் (ACA - 3) மாதிரியின் பிரகாரம் ரூபா 145,226,080 தொகையே காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கட்டுநிதி பெறுவனவு ரூபா 326,462 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - | |

**(உ) கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்தல் செய்யப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்துப் பேணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் ஆக்கபூர்வம் தொடர்பாக அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதனை ஆக்கபூர்வமாக வைத்திருப்பதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் ஆயினும், அம்மீளாய்வை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாடு / நிதிக் கட்டுப்பாடு / செயற்பாட்டு ஆக்கபூர்வமான உள்ள கட்டுப்பாடொன்றை பேணும் நோக்கில் ஒவ்வொரு காலாண்டிற்கு ஒருமுறை அனைத்துப் பணிப்பாளர்கள், கட்டளையிடும் உத்தியோகத்தர்கள், பிரதேச அதிகாரிகள் உட்பட உள்ளக கட்டுப்பாட்டை மேம்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடி பொதுவான தீர்மானங்களை எடுக்க வேண்டியதுடன் அக்கலந்துரையாடல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் இதன் பின்னர் நடாத்தப்படும் கலந்துரையாடல்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஊ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணக்கமின்மை**

தெரிவு கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் விபரிக்கப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| (i) 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டம் | | | |
| 16(2) ஆம் பிரிவு | வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் வரைவு செயலாற்றல் அறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய வரைவு செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2020 ஒக்தோபர் மாதம் 22 ஆந் திகதிய DGCG/ADM/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் வருடாந்த செயலாற்றல் அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக பணிப்பாளர் நாயகத்திற்கு (திட்டமிடல்) சமர்ப்பிக்கப்பட்டது. இதன் பிறகு அதன் பிரதியொன்றை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களுடன் வருடாந்த வரைவு செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) 2009 இன் 41 ஆம் இலக்க கரையோர பாதுகாப்பு திணைக்களச் சட்டம் | | | |
| 11 ஆம் பிரிவு | மதியுரை குழுவொன்று நியமிக்கப்பட வேண்டிய போதிலும் வருடாந்த செயற்பாடுகள் தொடர்பாக மீளாய்வொன்று மேற்கொண்டு விரிவான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | - மேற்படி - | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | கடலை அண்மித்த மற்றும் கடல்சார் சுற்றாடலை பாதுகாப்பதற்கு ஒத்துழைத்தல் திணைக்களத்தின் கடமை | - மேற்படி - | பதவியணி வெற்றிடங்களை விரைவில் நிரப்பப்பட வேண்டும். |

மற்றும் இலக்காக இருந்த போதும் பதவியணியில் காணப்படும் வெற்றிடங்கள் காரணமாக உரிய ஒத்துழைப்பை முறையாக நிறைவேற்றுவதற்கு முடியாமல் இருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வங்கி கணக்குகளைச் செயற்படுத்தல்

வங்கிக் கணக்குகளை பகுப்பாய்வு செய்த போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்ட போதும் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பெறுமதி ரூபா 42,443,982 ஆக இருந்ததுடன் அதில் வழங்கி 06 மாதங்களை மிகைத்து வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 10 காசோலைகளின் பெறுமதி ரூபா 253,378 ஆக இருந்தது. | வழங்குனர்களுக்கு பட்டியல்களைத் தீர்வு செய்வதற்கு உரிய அனைத்து அனுப்புகை பத்திரங்களும் பதிவுத் தபால் மூலம் சமர்ப்பிக்கப்படுவதுடன் உலகலாவிய தொற்று நிலைமையில் மேல் மாகாணத்தினுள் தபால் அலுவலகங்கள் அதிகளவில் மூடப்பட்டிருந்தமையால் அனுப்புகை பத்திரங்களை அனுப்பும் போது அதிகமான காலமொன்றை எடுத்தது. அதன் காரணமாக அதிகளவிலான அனுப்புகை பத்திரங்களின் செல்லுபடிக் காலம் மிகைத்திருந்தமை யால் மீண்டும் திகதி நீடிக்கப்பட்டு அனுப்புகை பத்திரங்கள் அனுப்ப வேண்டியேற்பட்டது. இதன் காரணமாக 06 மாதங்களை விஞ்சி வங்கிக்கு சமர்ப்பிக்கப் படாத அனுப்புகை பத்திரங்கள் காணப்பட்டன. COVID - 19 தொற்று நிலைமை காரணமாக வழங்குனர்கள் முகங் கொடுத்துள்ள நிலைமையில் அனுப்புகை பத்திரங்களின் காலத்தை நீடிப்பதற்கு கருத்திற் கொள்ளப்பட்டதுடன் எதிர்வரும் 03 மாத காலப்பகுதியில் அந்த அனுப்புகை பத்திரங்களை உரிய வகையில் வங்கிக்கு சமர்ப்பிப்பதற்கு தவறினால் நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அரசின் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) அக்காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 10 காசோலைகளுக்குரிய ரூபா 170,773 பெறுமதியான 05 காசோலைகள் 2021 பெப்ரவரி வங்கி இணக்கத்தின் பிரகாரம் மேலும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 (இ) பிரகாரம் அடுத்த ஆண்டிற்கான பெறுகை செயற்பாடுகளை விரிவாக தயாரிக்க வேண்டிய போதிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பெறுகை திட்டம் மீளாய்வாண்டின் முதல் 04 மாதங்களுக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. | செயற்பாடுகள் தொடர்பாக பதிவேடு எதிர்வரும் 08 மாதங்களுக்காக சமர்ப்பிக்க தவறியதாகவும் இதன் பின்னர் அவ்வாறு இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும். | முழு ஆண்டிற்கும் பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.2 (அ) பிரகாரம் பெறுகை ஆரம்ப சந்தர்ப்பத்திலிருந்து இறுதி சந்தர்ப்பம் வரையான பெறுகை செயற்பாடுகள் தொடர்பாக பதிவேடொன்று தயாரிக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.6 இன் பிரகாரம் கேள்வி திறப்பதற்குரிய நிதிசார் தகவல் மற்றும் ஒவ்வொரு கேள்வி தொடர்பான தகவல்கள் நிர்ணயிக்கப்பட்ட மாதிரிப் படிவமொன்றில் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் Timber Plank கொள்வனவு மற்றும் Macrotech Layer ஐ திருத்தம் செய்வது தொடர்பான பெறுகை செயற்பாடு களுக்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.6 இன் பிரகாரம் கேள்வி திறப்பதற்குரிய நிர்ணயிக்கப்பட்ட மாதிரிப் படிவத்தில் பல விடயங்கள் Timber Plank கொள்வனவு மற்றும் Macrotech Layer ஐ திருத்தம் செய்வது தொடர்பாக கோவைகளில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் சில விடயங்கள் உள்ளடக்கப்படாமையால் இதற்குப் பின்னர் கேள்விகளைத் திறப்பதற் காக பயன்படுத்தப்பட்ட மாதிரிப்படிவம் பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.6 இன் பிரகாரம் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | - மேற்படி - |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய ரீதியில் முக்கியமான காலரீதியான தேவையான உயர் பயிற்சி நிர்வாக மற்றும் வதிவிட கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 102.36 மில்லியன் மற்றும் ரூபா 55.40 மில்லியன் என கிரய மதிப்பீடொன்று 2016 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டு ஆரம்ப செயற்பாடுகளுக்காக ரூபா 14 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. விடயங்திற்கு இரண்டு நிர்மாணச் செயற்திட்டங்களும் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் ஜனவரி முதல் ஏப்ரல் வரை மாத்திரமாக இருந்ததால் அக்காலப்பகுதிக்காக மாத்திரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டு, காலாண்டு திருத்தப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மூலம் பாதீட்டு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டதுடன் காணப்பட்ட கொவிட் - 19 நிலைமை காரணமாக முறையான முகாமைத்து வத்துடன் பெறுகை மேற்கொள்வது சிரமமாக இருந்தது. 2017 ஆம் ஆண்டில் நிர்மாணத்திற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் அதில் களஞ்சிய விடயங்கள் கட்டளை இடப்பட்டு ரூபா 14.7 மில்லியன் பெறுமதியான களஞ்சிய விடயங்கள் செலவிடப்பட்டு நான்கு மாடி உயர் பயற்சி நிர்வாகக் கட்டிடத்தின் | விடயத்திற்குரிய நிர்மாணங்களை விரைவில் ஆரம்பித்து பூர்த்தி செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அத்திவாரம் இடப்பட்டுள்ளது. தற்போது இத்திணைக்கள தலைமையகத்தில் ரூபா 1.77 மில்லியன் மூலப்பொருட்கள் எஞ்சிக் காணப்பட்டதுடன் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்ட நிர்மாண வேலைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு 2021 சனவரி மாதம் 12 ஆந் திகதிய அமப/20/1949/303/ 051 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் மீண்டும் நிர்மாண வேலைகளை ஆரம்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. இத்திணைக்களத்திற்கு 2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடுகள் மூலம் அக்கட்டிடங்கள் இரண்டின் நிர்மாண வேலைகளை மேற்கொள்ள முடியாமையால் மேலதிக நிதி ஏற்பாடுகளை வழங்குமாறு 2021 மார்ச் மாதம் 01 ஆந் திகதிய DGGG/LOG/3 ஆம் இலக்க பணிப்பாளர் நாயகம், இ.க.பா. திணைக்களத்தின் கடிதத்தின் மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அந்த மேலதிக நிதிஏற்பாடு கிடைத்த உடனே அவ்விரண்டு கட்டிடங்களின் நிர்மாண வேலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்குரிய நிர்ணமாணங்களை துரிதமாக பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | |

## 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்ட ரூபா 722,523,850 பெறுமதியான தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்கள் இலங்கை பொலிசுக்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அக்கையளிப்பு தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப் பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் கைப்பற்றப்பட்ட தடை செய்யப்பட்ட போதைப் பொருட்கள் தொடர்பாக தற்போது எமது திணைக்களத்தினால் பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படாத போதும் எதிர்காலத்தில் அது தொடர்பில் அதிகளவு கவனம் செலுத்தப்படும். | கைப்பற்றப்பட்ட தடைசெய்யப்பட்ட போதைப் பொருட்களுக்காக பின்தொடர் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டில் திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்ட ரூபா 2,486,816,100 பெறுமதியான படகுகள் மற்றும் ஏனைய பொருட்கள் இலங்கை கடற்றொழில் துறைமுகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அக்கையளிப்பு தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்ட படகுகள் தொடர்பான மீன்பிடி படகுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற செயலாற்றலைக் கருத்திற் கொள்ளும் போது அடிக்கடி கலந்துரையாடப்படுவதுடன் கைப்பற்றப்பட்ட படகுகள் தொடர்பாக எடுக்கப்பட்ட சட்டரீதியான நடவடிக்கைகள் தொடர்பாக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சினால் எமது திணைக்களம் உத்தேச நடைமுறையின் பிரகாரம் அறிவூட்டல் மேற்கொள்ளப்படுகின்றது. | - மேற்படி - |

**5. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட மட்டத்தின் இரண்டு பதவிகள் கணக்காய்வு திகதி வரை வெற்றிடங்களாக காணப்பட்டன. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட மட்டத்தின் இரண்டு பதவிகள் 08 ஆண்டுகளாக வெற்றிடங்களாக காணப்படவில்லை. | வெற்றிடமான பதவிகளை துரிதமாக நிரப்புவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) இலங்கை கடற்படையால் விடுவிப்பு அடிப்படையில் இணைக்கப்பட்டுள்ள பதவியணினுள் முறையே உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்படையினர் 26 மற்றும் 182 அதாவது 21 சதவீதம் மற்றும் 12 சதவீதம் வெற்றிடங்களாக காணப்பட்டன. | இலங்கை கடற்படையால் விடுவிப்பு அடிப்படையில் இணைக்கப்பட்டுள்ள பதவியணினுள் முறையே 99 உத்தியோகத்தர்கள் மற்றும் 1318 கடற்படையினர் வெற்றிடங்கள் அல்ல அவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக சீர் செய்யப்பட வேண்டும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கணக்கு அலுவலகத்திற்காக இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் மூன்று பேராக இருந்தமையால் கடமைகளை நிறைவேற்றும் போது அதிகளவில் சிக்கல்கள் காணப்பட்டன. | கணக்கு அலுவலகத்திற்காக தற்போது மூன்று கடற்படையினராக இருப்பதால் எதிர் காலத்தில் மற்றுமொரு கடற்படையினரை இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான இணைப்புக்களை துரிதமாக்க வேண்டும். |
| (ஈ) | வெற்றிடங்களின் எண்ணிக்கை அதிகரித்தல் சுயாதீன நிறுவனமொன்றாக திணைக்களத்தின் கடமைகளை எதிர்காலங்களில் செயற்திறனாக நிறைவேற்ற தடையாக இருந்தது. | 2021 ஏப்ரல் 29 ஆந் திகதிய டீஜிஸீஜி/எல்ஓஜி/10 ஆம் இலக்க பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் தற்போதய பதவியணி மற்றும் வெற்றிடங்கள் தொடர்பாக விரிவான தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. | திணைக்களத்தின் கடமைகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு காணப்படும் வெற்றிடங்களை விரவாக நிரப்ப வேண்டும். |